DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**IDOP.No.7/2025**

Deposition of Witness : R.W. 1

| | |
|---|---|
| Name - **திருமதி.வெற்றிச்சுடர்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **12.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை** –

நான் வழக்கின் மனுதாரர். எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவை. சரி என ஒப்புக்கொண்டு எனது கையொப்பத்தினை செய்துள்ளேன்.

**சான்றாவணங்கள் : இல்லை**

**நீதிமன்ற கேள்வி**

1. நான் ஆக்னஸ் என்ற இராயப்பன்பட்டியில் அமைந்துள்ள பள்ளியில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு திருமணம் பேசி முடிக்கப்பட்டது. அதன்பிறகு நான் 10ம் வகுப்பு பரிட்சை எழுதி 326 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றேன். 2011-2012ம் ஆண்டு நான் தேர்ச்சி பெற்றேன். நான் தற்போது எனது பெற்றோருடன் உத்தமபாளையத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஷாரோன் பிரான்ஸிஸ் என்ற பெண் குழந்தை உள்ளது, அவருக்கு 15 வயதாகிறது. எனது குழந்தையானது விகாசா வித்யாலயா பள்ளியில் பயின்று வருகிறார். என்னுடன் பிறந்த அக்கா, தங்கை மற்றும் தம்பி ஆகியோர் உள்ளார்கள்.

2. நான் கடந்த 1 ½ ஆண்டுகளாக எனது பெற்றோர் வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் க.புதுப்பட்டியைச் சேர்ந்த ஒரு பெண்மணியை இரண்டு குழந்தைகளுடன் அவரது வீட்டிற்கு அழைத்து வைத்து குடும்பம் நடத்தி வருகிறார், அந்த தெருவில் உள்ள நபர்கள் சொல்லி இந்த விபரத்தை தெரிந்து கொண்டேன். எனது மகள் 10ம் வகுப்பு படித்து வருகிறார். அவர் மனுதாரரின் தாயாருடன் கோவிந்தன்பட்டியில் வசித்து வருகிறார். கடந்த 1 வருடங்களாக அவரது பாட்டி வீட்டில் தான் எனது மகள் வசித்து வருகிறார், அங்கிருந்தே பள்ளிக்கு சென்று வருகிறார்.

3. நான் அழைத்தும் அவர் அப்பா, அம்மா இருவரும் வேண்டுமென கூறி என்னை மனுதாரர் வீட்டிற்கு வரச்சொல்லி சொன்னார். நான் வரமுடியாதென சொல்லிவிட்டேன். நான் 2017ம் ஆண்டு குடும்ப வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் மனுத்தாக்கல் செய்து, உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அந்த வழக்கானது நடைபெற்று வந்தது. அந்த வழக்கை நான் கடந்த 2018-19ம் ஆண்டு வாபஸ் வாங்கினேன். மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக சொன்னதன் காரணமாக நான் அந்த வழக்கை வாபஸ் வாங்கினேன். நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ இதுநாள் வரை முயற்சி ஏதேனும் எடுத்தேனா என்றால் ஒருமுறை வீட்டிற்கு சென்றேன், அவர் வீட்டிற்கு வரக்கூடாதென என்னிடம் சொல்லிவிட்டார். அதன்பிறகு மகளிடம் சொல்லி சேர்ந்து வாழ்வதற்கு முயற்சி செய்தேன்.

**வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.12 15:54:21 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.